பிற்பகல்
தமிழ் நாளிதழ்

29.11.2019 பக்கம்-2

# கைவினைப்பொருள் தயாரித்து அசத்தும் கோவை பெண்ணுக்கு கே.பி.ஆர். விருது




கோவை கே.பி.ஆர். பொறியியல் கல்லூரியின் மகளிர் மேம்பாட்டு அமைப்பின் சார்பில் எஸ்.ஏ.ராதிகாவுக்கு 'கே.பி.ஆர். பிளையிங் பீ அவார்டு' ஐ கல்லூரி முதல்வர் முனைவர் மு.அகிலா வழங்கினார். அருகில் பேராசிரியை கே.ஜானகி, துறைத் தலைவர்கள் எம்.ஜி. சுமித்ரா, கே.எஸ்.ராமசாமி, எம்.ஹேமா ஆகியோர் உள்ளனர்.

**கோவை, நவ. 29**

கோவை கே.பி.ஆர். பொறியியல் கல்லூரியின் மகளிர் மேம்பாட்டு அமைப்பின் சார்பில் 'கே.பி.ஆர். பிளையிங் பீ அவார்டு' வழங்கும் விழா கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மு.அகிலா தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். மகளிர் மேம்பாட்டு அமைப்பின் துணைத் தலைவியும் மின்னியல் துறை உதவி பேராசிரியையுமான எஸ்.திவ்யா வரவேற்றுப் பேசினார்.

இவ்விழாவில் கோவை பாரதிபுரத்தைச் சேர்ந்த எஸ்.ஏ.ராதிகாவுக்கு 'கே.பி.ஆர். பிளையிங் பீ அவார்டு' விருது வழங்கப்பட்டது.

இவ்விருதை பெற்ற ராதிகா செய்த சாதனை என்ன? என்பதை இங்கே காண்போம்.

ராதிகாவுக்கு இளம் வயதிலேயே எளிதில் உடையக்கூடிய எலும்பு நோய் உள்ளது. அதனால் அவரால் சாதாரணமாக செயல்பட இயலாது. அதனைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல் வீட்டில் இருந்தபடியே உயர் கல்வி கற்று வருவதுடன் பழைய தாள்களைக் கொண்டு பல்வேறு விதமான அலங்காரப் பொருட்கள் மற்றும் கைவினைப்பொருட்களை செய்து அவற்றை நேரடியாகவும் ஆன்லைன் மூலமும் விற்பனை செய்து வருகிறார்.

அவரது சாதனைப் பொருட்களை பெரிய நிறுவனங்கள் ஆர்வத்துடன் வாங்கி பரிசளித்து வருகின்றன. ராதிகாவின் இம்முயற்சிக்கு அவரது பெற்றோர் மற்றும் சகோதரர் எஸ்.ஏ.ராஜ்மோகன் மற்றும் அவரது நண்பர்கள் உதவி புரிகின்றனர்.

எஸ்.ஏ. ராஜ்மோகன், கே.பி.ஆர். பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார்.

விழா வில் எஸ்.ஏ.ராதி காவின் முயற் சியை பலரும் பாராட்டினர்.

இறுதியில் கணிதத் துறை பேராசிரியையும் மகளிர் மேம்பாட்டு அமைப்பின் தலைவியுமான முனைவர் கே.ஜானகி நன்றி கூறினார்.